<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 24.09.2025

**அசல் வழக்கு எண்.326/2023**

**வா.சா.1 – குமாரி, க/பெ.முருகேசன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

உங்கள் கணவர் பெயர் முருகேச முதலியார் என்றால் சரிதான். உங்களுக்கு முதல் பிறந்தது பையனா அல்லது பெண்ணா என்றால் பெண் குழந்தை பிறந்தது. உங்களுடைய பெரிய மகள் பெயர் என்ன என்றால் அவர் பெயர் சாந்தி ஆகும். இரண்டாவது மகள் பெயர் என்ன என்றால் அவர் பெயர் லட்சுமி ஆகும். மூன்றாவது மகன் மணிகண்டன் என்றால் சரிதான். நான்காவது மகன் ஏகாம்பரம் என்றால் சரிதான். நீங்கள் நான்காவது மகன் மீது வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். ஐந்தாவது மகன் பெயர் செல்வம் என்றால் சரிதான். மணிகண்டன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மணிகண்டன் என்பவருக்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். மற்ற நான்கு பேருக்கும் கடந்த 2010 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே திருமணம் நடைபெற்று விட்டது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்ற பிறகு அனைவரும் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். உங்களுடைய மகன் மற்றும் மகள்கள் அனைவரும் விவசாயக் கூலி வேலைக்கு தான் செல்கிறார்கள் யாருக்கும் அரசு பணி எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் புல்லலூர் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதனுடைய பரப்பளவு எவ்வளவு என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு 74 சென்ட்க்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி 74 செண்டு நிலமும் உங்களுடைய அப்பாவுக்கு சொந்தமானது என்றால் சரிதான். உங்கள் அப்பா பெயர் லோகநாத முதலியார் என்றால் சரிதான். லோகநாத முதலியாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான் ஒரு பெண் மற்றும் ஒரு பிள்ளை பார்த்தசாரதி என்கிற ஒருவர் இருக்கிறார். மேற்படி பார்த்தசாரதி உங்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்பதற்காக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் என் அசல் வழக்கு எண் 58/1995 என்றால்

சரிதான். அந்த வழக்கு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் முடிந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின்படி உங்களுக்கு 37 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்த பிறகு அண்ணன் பார்த்தசாரதி இறந்து விட்டார் என்றால் சரிதான். பார்த்தசாரதி அவர்களின் வாரிசுகள் மீதம் இருந்த 37 சென்டினை செல்வம் மற்றும் ஏகாம்பரத்திற்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். அந்த விற்பனை 28.08.2002ல் நடைபெற்றது என்றால் சரிதான். ஆகவே பாகப்பிரிவினை வாயிலாக உங்களுக்கு கிடைத்த 37 சென்ட்க்கு நீங்கள் உரிமையாளர் அதேபோல் விற்பனை வாயிலாக கிடைத்த 37 செண்ட் நிலத்திற்கு செல்வமும் ஏகாம்பரமும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். ஆகவே வழக்கு சொத்து தனித்தனியான சொத்து கூட்டு குடும்ப சொத்து கிடையாது என்றால் சரி இல்லை. பட்டா ஒரு பட்டாவாக வழங்கப்பட்டதால் கூட்டு குடும்ப சொத்து என்று கூறுவது தவறு என்றால் சரியில்லை. கூட்டுக் குடும்ப சொத்து இல்லை என்பதால் நீங்கள் வழக்கில் பாகம் கோர முடியாது என்றால் சரி இல்லை. நீங்கள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் கூட பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி இல்லை. வழக்கு சொத்துக்கு கிழக்கே தணிகாசலம் நிலம் உள்ளதா என்றால் தெரியாது. ஏரிக்கரையை ஒட்டி வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். ஏரிக்கரையை ஒட்டி இருப்பதால் எப்பொழுதும் நீர் பிடிப்பு இருக்கும் என்றால் சரிதான். உங்கள் நிலத்திற்கு தண்ணீர் போக வேண்டும் என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்ல வேண்டும் என்றால் சரிதான். உங்கள் சொத்து வாய்க்கால் ஒட்டி வடக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். உங்கள் சொத்துக்கு தெற்கில் ஏகாம்பரம் பயிர் வைத்துக் கொண்டு இருந்தார் அதனுடைய விஸ்தீரணம் 18 ½ செண்ட் என்றால் சரிதான். உங்களுடைய 37 சென்ட்டும் செல்வம் என்பவருடைய 18 ½ செண்ட்டும் நீங்கள்தான் விவசாயம் செய்தீர்கள் என்றால் சரியில்லை. ஏகாம்பரத்துக்கு சொந்தமான 18 ½ சென்ட் நிலத்தை ஒட்டி பயிர் வைக்கும் போது நீங்களும் செல்வமும் தகராறு செய்து அடித்து விரட்டி விட்டீர்கள் என்றால் சரியில்லை. அவ்வாறு நீங்கள் அடிக்கும் பொழுது ஏகாம்பரத்தில் மனைவியை அடித்தீர்கள் அப்பொழுது ஏகாம்பரத்தின் மனைவிக்கு கண்ணு கலங்கிவிட்டது என்றால் சரியில்லை. ஆகவே ஏகாம்பரத்தில் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நீங்கள் விசாரணைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தே புகாரினை முடித்து வைத்துவிட்டீர்கள் என்றால் சரியில்லை. இந்த வழக்கில் உங்களுக்கு

பிறந்த பெண் வாரிசுகளை வழக்கில் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து தகர இதர உங்களுக்கு சொந்தமான சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்து இல்லாமல் உங்கள் கணவர் பெயரில் 1 ஏக்கர் 64 சென்ட் உள்ளது என்றால் அதை நாங்கள் விற்பனை செய்துவிட்டோம். முருகேச முதலியார் என்பவர் குமாரி என்கிற உங்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் 176/2, 198/2B, 200/3A அதன் மொத்த விஸதீரணம் 1 ஏக்கர் 56 ½ சென்ட் என்றால் அதனை விற்பனை செய்துவிட்டேன். நீங்கள் விற்பனை செய்ததாக கூறுவது தவறு அந்த சொத்து உங்கள் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரியில்லை. பிரதிவாதி வில்லங்கச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார் அந்த அடிப்படையில் அந்த சொத்து உங்கள் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரியில்லை. அதேபோல் சர்வே எண் 198/3 அடங்கிய 27 சென்ட் உங்கள் பெயரில் இருக்கிறது என்றால் நான் விற்பனை செய்துவிட்டேன்.நீங்கள் மேற்படி சொத்துக்களை வழக்கில் சேர்க்காமல் வெறும் 74 செண்ட்டுக்காக மட்டும் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியில்லை. ஆகவே ஏகாம்பரம் என்பவர் எதிர் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியில்லை. வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து கிடையாது தனிப்பட்ட சொத்து என்றால் சரி இல்லை. ஆகவே நீங்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. ஏகாம்பரம் தாக்கல் செய்த எதிர் பரிகாரம் செல்லத்தக்கது என்றால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.